# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1801/42 - 2013 මාර්තු 15 වැනි සිකුරාදා - 2013.03.15

*1801/42 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : எல்ஈஜ-சீஎபீ/எஸ்டீ/ஆர்/ 1 (ஏடிடி).

பொதுவான நடவடிக்கைக்குத் தேவையான கீழே குறிப்பிட்டுள்ள காணிகளை காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7 ஆவது வாசகம் 1 ஆவது உப வாசகத்தின் கீழ் அரசு சுவீகரித்துள்ளதென்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள காணியின் விபரம் :

மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தில், இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில், இரத்மலானை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கொ. 521003 (தொகுதி 5 தாள் 02) ஆம் இலக்க மற்றும் 2012.12.31 ஆந் திகதியிலான ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இலக்கம் 673 மற்றும் 674 எனக் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.0017 ஹெக்டயார் விஸ்தீரண முடைய  காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

*01.* **துண்டு இல. 673**

காணியின் பெயர் : கஜுகஹவத்த அல்லது கொட்டம்பகஹவத்த மற்றும் தொம்பகஹஓவிற்ற எனப்படும் கரிட்டேஓவிற்ற ; விபரம் : பாதை ; ஆரம்ப உரிமை கோருபவர் : மஹிந்த விஜேரத்ன, இல. 38/1, காமினி ஒழுங்கை, இரத்மலானை ; விஸ்தீரணம் : 0.0002 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. 674**

காணியின் பெயர் : கஜுகஹவத்த அல்லது கொட்டம்பகஹவத்த மற்றும் தொம்பகஹஓவிற்ற எனப்படும் கரிட்டேஓவிற்ற ; விபரம் : லுனாவ பிரதான கால்வாய் ; ஆரம்ப உரிமை கோருபவர் : மஹிந்த விஜேரத்ன, இல. 38/1, காமினி ஒழுங்கை, இரத்மலானை ; விஸ்தீரணம் : 0.0004 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் வருடம் ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி பத்தரமுல்ல, புதிய பாராளுமன்ற வீதி, லக்திய மெதுர, நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சில் என்னைச் சந்திக்க வேண்டும்.

மேலும் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னதாக குறித்த காணிகள் தொடர்பாக அவர்களின் உரிமைகளின் தன்மைகளையும் குறித்த காணிகள் சுவீகரிக்கப்பட்டமை தொடர்பில் இழப்பீட்டைக் கோருவதற்கான காரணங்கள் தொடர்பான விபரங் களையும் இழப்பீட்டுத் தொகை மற்றும் அதனைத் கணித்த விதம் ஆகியவற்றை இரண்டு பிரதிகள் அடங்கிய ஆவணத்தின் மூலம் என்னிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

எஸ். வீரபாகு,
சுவீகரித்தல் உத்தியோகத்தர்.

காணி சுவீகரித்தல் காரியாலயம்,
நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு,
லக்திய மெதுர, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்லை,
2013.03.14.

03-1174

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : கொட/எல்என்டீ/அத்/1/16.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், கொடபொல பிரதேச செயலாளர் பிரிவில், மதுகொபே கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. 169, பிற்சேர்க்கை இல. 125, தாள் இல. 107,  துண்டு இல. 1440 உம் 1441 எனக் குறிப்பிடப்பட்ட  0.1836 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்படும் காணித்துண்டுகள் :

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**துண்டு இல. 1440**

காணியின் பெயர் : தெமளியதொல லந்த ; உரிமை கோருபவர் : மசேலராசமணீ, இல. 41, ரஜமகாவிகார வீதி, பிட்டகோட்டை ; விஸ்தீரணம் : 0.0263 ஹெக்டயார்.

**துண்டு இல. 1441**

காணியின் பெயர் : தெமளியதொல லந்த ; உரிமை கோருபவர் : மசேலராசமணீ, இல. 41, ரஜமகாவிகார வீதி, பிட்டகோட்டை ; விஸ்தீரணம் : 0.1573 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் வருடம் யூன் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொடபொல பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கனேச அமரசிங்க,
பிரதேச செயலாளர்,
கொடபொல.

பிரதேச செயலகம்,
கொடபொல,
2013.03.11.

03-1176

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : பிரீபீ/எல்என்டீ/அத்/07/4.

மேற்குறித்த தலைப்பின் கீழ் 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 1522/22 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட துண்டு இல. 1584 இன் விஸ்தீரணம் 0.0088 ஹெக்டயார் ஆனது 0.0008 ஹெக்டயார் என திருத்தப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கே. ஜீ. ஆர். ஜயநாத்,
பிரதேச செயலாளர்,
பிடபெத்தர.

பிரதேச செயலகம்,
பிட்டபெத்தர,
2013.03.06.

03-1175

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.